பணம் சங்க அங்கத்தினர்களால் முறைகேடாகக் கையாளப்பட்டு இருக்கிறது. எனவே கிரிமினல் வழக்கும் தொடருவதற்காக அரசு யோசித்து வருகிறது.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு வினா–விடை நேரத்தைச் சிறிது நீட்டிக்கிறேன்.

திருப்பத்தூரில் சந்தனத் தொழிற்சாலை.

*வினா எண் 18—திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் சந்தனத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அருகில் சந்தனக் கட்டைகளில் இருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்து அரசால் ஏற்கப்பட்டு இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. தி. அன்பழகன் : தலைவரவர்களே, திருப்பத்தூர் பகுதி தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும், அந்தப்பகுதி மக்களின் நீண்டகாலக்கோரிக்கையாக இது இருப்பதாலும் இது எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப்படும் ? இதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, திருப்பத்தூர் பகுதி பின்தங்கிய பகுதி என்ற காரணத்தால்தான் முதல் கட்டமாக ரூ. 23 இலட்சம் செலவில் சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்கூடத்தை இப்போது ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். மிக விரைவிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

Practice in Homeopathy by Govenment Employees

*Q.No. 19 : Thiru N, KITTAPPA : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Government employees with Homeopathy qualifications have been permitted by the Government to have practice out of office hours ; and

(*b*) if so, the details thereof ?